www.tamilarangam.net

# "சகல இயக்கங்களும் உறுதியுடன் போராடினுல்தான் மக்களை காக்கமுடியும்"

ஈழநாடு 26.5.86 — ஈ. பி. ஆர். எல. எவ்.

[யாழ்ப்பாணம்]

மக்களின் விடுதலைக்காக குருதிசிந்திய தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், தமிழீழ இராணுவம் ஆகிய சகோதரமை இயக்கப் போராளிகளுக்கும் தமது இயக்கப் போராளிகளுக்கும் வணக்கம் செலுத்தி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ பி. ஆர் எல் எவ்] அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"யாழ் குடாநாடெங்கும் இராணுவத்தின்அணிவகுப்பை முறியடிக்க இடைவிடாது சகல விடுதலை அமைப்புக்களும் போரிட்டன. ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகப் போராடி சகோதரமை இயக்கப்போராளிகளும், எமது தோழர்கள் மூவரும் மக்களின் விடுதலைக்காகமரித்தார்கள்.

கடந்த 7ம் திகதியன்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தில் முகாமிட முயன்ற பட்டாளங்களுக்கு எதிராக மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் தாக்குதல் நடத்தினர். இதல் பல இராணுவத்தினர் காயமடைந்தனர். இத்தாக்குதலை அடுத்து பட்டாளங்கள் முகாமைவிட்டு வெளியேறியன.

18ம் திகதி தனுவிலில் படைகள் வந்திறங்கின அவர்களை விரட்டியடிக்க இருநாட்கள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர். பலர்படுகாயப்படுத்தப்பட்டனர் இத்தாக்குதலில் தனக்கு ஏற்பட்ட சேதத்தை முற்றாக மறைக்கமுடியாத சிறிலங்கா அரசு சில இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் போராளிகள பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறியது. ஆனல் எமது தரப்பில் எதுவித இழப்புமில்லை. தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது ஆக்கிரமிப்பு படைகள் சிறிலங்கா தேசியக்கொடியையும், உணவுப் பொருட்களையும், தோட்டாக்கள், சீருடைகள் என்பனவற்றையும் கைவிட்டுச்சென்றனர். இவை மக்களின் பார்வைக்காக எம்மால் வைக்கப்பட்டதுடன் சிறிலங்கா தேசிய கொடி மக்களால் எரிக்கப்பட்டது.

19ம், 20ம் திகதிகளில் யாழ். கோட்டை முகாமிலிருந்து சிறீலங்கா இராணுவம் வெளியேற முயன்றபோது மோட்டார் 'ஷெல்' தாக்குதல் நடத்தினர்.

இருநாட்களும் நடைபெற்ற தாக்குதலில் பங்கெடுத்த மக்கள் விடுதலைப்படை உறுப்பினர்களான ஸ்டீபன் (செல்வரத்தினம்) பலாலி, கெங்கா (சிறி காங்கேசன்துறை, பிரகாஸ் (ஜெயசேகரன்) உடுவில் ஆகியோர் தம்முயிர் இழந்தனர்

22ம் திகதி அன்று அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலையில் முகாமிடுவதற்காக வந்த படைகள்மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடாத்தியபோது பின்வாங்கினர். இதில் பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்; சிலர் கொல்லப்பட்டனர்

22ம் திகதிவசாவிளான் மகாவித்தியாலயத்தில் முகாமிட்டுள்ள படைகள் சிலர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

சகல இயக்கங்களும் உறுதியுடன் போரிட்டதால் மட்டுமே திட்டமிட்ட படுகொலை நடவடிக்கைகளில் இருந்து மக்களைக்காக்க முடிந்தது."

[மா]

01.769.5340

24 மணிநேர செய்தி சேவை

★ EPIC



ஈ. பி. ஆர். எல். எப் அறிவிப்பு: ஈழமுரசு 20.6.86

# வசாவிளான் பகுதி தாக்குதல் எட்டு ராணுவத்தினர் மரணம்

தொடர்புகளுக்கு

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

வசாவிளான் ராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியே வந்த ராணுவததனர் மீது மக்கள் விடுதலைப்படை நடத்திய தாக்குதலில் எட்டு ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இத்தாக்குதலால் ராணுவத்தினர் பின்வாங்கி முகாமிறகுள் சென்று விட்டதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எஃப் விடுத்துள்ள அறிக்கையின்விபரம்வருமாறு:

நேற்றுக்காலை பத்து மணியளவில் வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்குமேற்பட்ட ராணுவத்தினர் மனித வேட்டைக்காக நவீனரக ஆயுதங்களுடன்வெளியேவரமுயன்றனர். இவர்களைவெளியேறுது தடுக்கும் முகமாக மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தினர். மக்கள் விடுதலைப்படை நடத்திய மோட்டார் தாக்குதலில் ஆறு ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மக்கள் விடுதலைப் படைக்கும் ஸ்ரீலங்கா ராணுவத்தினருக்கும் இடையேயானதுப்பாக்கிச் சமரில் மேலும் இரண்டு ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து வசாவிளான் முகாமிற்கு கூலிப்பட்டாளங்கள் பின்வாங்கின. மக்கள் விடுதலைப்படை வீரர்கள் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

## எழுவரின் மரணத்துக்காக வடக்கில் நேற்று அஞ்சலி

வீரகேசரி 11.7.86

யாழ்நகர்,

இராணுவ முகாமைத் தாக்குவதற்காக கடலில் பயணம் செய்தபோது வெள்ளம் கலிழ்ந்ததால் மரணமான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஏழம்பரின் மரணத்துக்காக அஞ்சலி செலுத்து முகமாக நேற்றுமாலை மூன்று மணி முதல் வடபகுதியில் கடைகள் மூடப்பட்டதோடு சகல இடங்களிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

நேற்று மாலை மூன்று மணி முதல் யாழ் நகரில் வாகனப் போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் வேண்டுகோளையடுத்தே இந்த அஞ்சலி இடம்பெற்றது

"ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" இன்

- புரட்சிப் பாடல்கள் -

தென்றலும் சூடாகிப் போனது-
எங்கள் வீட்டு முன்றலில் பறந்த,
வெள்ளைப் புறாக்களில், ஏனிந்த இரத்தச் சிவப்பு!
ஓ......!
புத்த விமானங்களின் குண்டுமழை நெரிசலில்,
உங்களுக்குச் சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையோ?
இப்படி, சுதந்திரமாய்ப் போன சம்பவங்களை; உங்கள்
காதுகளுக்குத் தூது விடும் காணங்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாம்பல்தீவு நேரடி மோதலில் பன்னிரண்டு இராணுவம் பலி

ஈழநாடு 2/6/86

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு என்னும் இடத்தில் இராணுவத்தினர்க்கும் மக்கள் விடுதலைப்படையினருக்கும் இடையே இடம்பெற்ற நேரடி மோதலில் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானுர்கள்.''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இறக்கக்கண்டி முகாமிலிருந்தும் வில்க்கம் விகாரை முகாமிலிருந்தும் மூன்று பிரிவுகளாக சுமார் இரண்டாயிரம்இராணுவத்தினர் அணிவகுத்து சாம்பல்தீவுக் கிராமத்தை முற்றுகையிட்டு தேடுதல் நடாத்த வந்துகொண்டிருந்தனர். சாம்பல் தீவை இராணுவம் அண்மித்ததும் மக்கள் விடுதலைப்படையினர் எதிர்த்தாக்குதலை ஆரம்பித்தனர். ஆறுமணி நேரம் இராணுவத்தினருடன் நடாத்திய கடும்சமரில் எமது படையினரின் மோட்டார் தாக்குதலால்12ற்குமேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். சிதறிய நிலையில் இராணுவத்தின் உடல்கள் கிடந்தன இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கினர். மக்கள் விடுதலைப்படைத் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

கடந்த 19ம்தேதி காலை 8-30மணியளவில்முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து கிளிநொச்சி நோக்கி இராணுவத்தினர் நடைபவனியாக வந்தனர். புதுக்குடியிருப்பில் வைத்து சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொண்ட மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். ஏழு மணித்தியாலங்களாக மக்கள் விடுதலைப் படையினர் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதலால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இதேவேளை பொம்பர் விமானமும் இரு ஹெலிகொப்டர்களும் மக்கள் மீது நடாத்திய தாக்குதலால் இரு வயோதிபர்கள் பலியானுர்கள். மேலும் இருவர் சுடப்பட்டனர்.

மக்கள் விடுதலைப்படையின் தாக்குதலால் தமது தாக்குதல்களை தொடரமுடியாமல் சிறீலங்கா படைகள் பின்வாங்கி விட்டன. மக்கள் விடுதலை படை வீரர்கள் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

---

ஈழநாடு 9.7.86

பட விபத்தில் [redacted]

# 7 ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் மரணம்!

யாழ்ப்பாணம், புதன்

ஸ்ரீலங்கா படைகளின் முகாம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்துவதற்காக நமது மக்கள் விடுதலைப் படைவீரர்கள் சென்ற இயந்திரப்படகு கடலில் விபத்துக்குள்ளானதில் ஏழுபேர் உயிரிழந்துள்ளதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ பி. ஆர். எல். எவ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று முன்தினம் நடைபெற்ற இவ்விபத்தில் மக்கள் விடுதலைப்படையின் முக்கிய உறுப்பினர்களான கிருபானந்தன் (இமாம்) சாவகச்சேரி, ஈஸ்வரன் (எட்வேட்) கோப்பாய், (சர்வதேச பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர், மோகனராஜ் (அசோக்) இளவாலை, விமலேந்திரன் (நாகராசா) திருகோணமலை, கண்ணன் (சுகிர்தன்) கல்வியங்காடு, ஞானசேகரன் மட்டக்களப்பு (சர்வதேச பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்), அகிலன் (செண்பகன்) உரும்பராய் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்,

இச்சம்பவத்தில் எமது தோழர்களுடன் இணைந்து எமக்கு ஒத்துழைப்பு நல்கிய ஈழ புரட்சி (ஈரோஸ்) அமைப்பினரை தோழமையுடன் நினைவு கூருகின்றோம்.

மக்களின் விடுதலைக்காக மரித்த எம் தோழர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி 10-7-86 அன்று மாலை 3 மணி முதல் கடைகளை பூட்டி போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தி கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு மக்களுக்காக மரணித்த தோழர்கட்கு அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகின்றோம்.'' [மா]

---

# மண்டைதீவில் கடற்படைமீது ஈ. பி. ஆர். எல்.எவ். தாக்குதல்

ஈழநாடு 11/6/86

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் கடற்படையினருக்கும் தமது இயக்கத்தின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படையிருக்குமிடையே இடம்பெற்ற நேரடி மோதலில் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டதாகவும் காயமடைந்ததாகவும் கடற்படையினருக்கு உதவியாக வந்த ஹெலிகாப்டர் ஒன்று சேதமாக்கப்பட்டதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல் எவ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மண்டைதீவு கடற்கரையோரத்தில் கடற்தொழிலாளர் முப்பதற்கு மேற்பட்டோரை கொலை செய்துவிட்டு மண்டைதீவில் தமது மனித வேட்டையை தொடர்வதற்காக வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரை எமது படையினர் எதிர்கொண்டு கடுமையாக தாக்கினர்கள். மக்கள் விடுதலைப்படையின் மோட்டார் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் ஸ்ரீலங்கா படைகள் பின்வாங்கின இம் மோட்டார் தாக்குதலின் போது கொல்லப்பட்டும் காயமடைந்த நிலையிலும் பலர் கடற்படையினரால் தூக்கிச் செல்லப்பட்டனர். எமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை. இதையடுத்துமண்டைதீவுக் கடற்கரையில் கடற்படையால் படுகொலைசெய்யப்பட்ட மக்களின் உடல்கள் மக்கள் விடுதலைப்படையால் மீட்கப்பட்டு குருநகர் கொண்டு வரப்பட்டது.

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் கடற்தொழிலாளர்களுக்கு எமது இதய அஞ்சலியையும் இப்படுகொலையால் துயருற்றுள்ள குருநகர் மக்களுக்கு அனுதாபத்தையும்தெரிவிக்கிறோம். (மா)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்